நல்லூர் இசை நூலகம் மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்


# உதயன்

விலை ரூபா 5-00

மலர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆடி 19 செவ்வாய்க்கிழமை (3-08-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 248


## உண்ணாவிரதிகளின் உறவினர்கள்

# தலைவர் பிரபாவுக்குக் கடிதம்

# கைதிகளை விடுவிக்க கோரி!

### வினாத்தாளில் குளறுபடி:

## பிரயோக கணிதம் I, II பரீட்சைகள் புதிதாக!

கொழும்பு, ஆக 3

நேற்று ஆரம்பமான ஜி. சீ. ஈ. (உயர்தரப்) பரீட்சையில் பிரயோக கணிதம் I, பிரயோக கணிதம் II ஆகிய இரு வினாத்தாள்களும் இரத்துச் செய்யப்பட்டிருப்பதாக பரீட்சைத் திணைக்களம் நேற்று மாலை அறிவித்தது.

இதன்படி —

நேற்று நடைபெற்ற பிரயோக கணிதம் I பரீட்சை ரத்துச் செய்யப்பட்டுள்ளது; இன்று நடைபெறவிருந்த பிரயோக கணிதம் II பரீட்சை இன்று நடைபெற மாட்டாது.

இப்பாடத்துக்கான இரு பரீட்சைகளும் இம்மாதம் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறும் என நேற்று மாலை வெளியான அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற பிரயோக கணிதம் I பரீட்சையின் தமிழ் மொழி வினாத்தாளின் ஒரு பக்கத்தில் அச்சகத் தவறு காரணமாக பிரயோக கணிதம் II பரீட்சையின் வினாக்களும் இடம் பெற்று விட்டதாகவும் —

இதனால் இன்று நடைபெறவிருந்த பிரயோக கணிதம் II பரீட்சையின் வினாக்கள் முன்னரே வெளியாகி விட்டதாகவும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இளவாலை படையினர் சூடு! பிரான்பற்றில் ஒருவர் பலி!!

இளவாலைப் பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினர் நேற்றுக் காலை 9 மணியளவில் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் பிரான்பற்றில் இருந்த ஒருவர் பலியானார்.

பொன்னம்பலம் தங்கராசா [வயது 50] என்பவரே பலியானவராவார்.

நேற்றுக் காலை வீட்டுக்கு வெளியே உள்ள தமது தோட்டத்தில் இவர் வேலை செய்து கொண்டிருந்ததாகவும் —

அப்போது மாதகல், இளவாலைப் பகுதியிலிருந்து துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும் —

திடீரென தங்கராசா ''ஐயோ'' என்று கத்தியபடி கீழே விழுந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

குடும்பத்தவர்கள் வீட்டுக்கு வெளியே ஓடிவந்து பார்த்த போது, அவரது முதுகுப் புறத்தால் பாய்ந்த ரவை, நெஞ்சுப் பகுதியால் வெளியேறி இருந்ததைக் கண்டனர்.

சங்கானை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட அவர், வழியில் மரணமானார். (உ-9)

## ஊழல் நடவடிக்கையில் ஈடுபட்டவர் கைது!


யாழ்ப்பாணம், ஆக. 3

போக்குவரத்துத் தொடர்பான அவசர அனுமதி வழங்கும் சங்கானை செயலகத்தில் உதவியாளராகக் கடமை புரிந்த ஒருவர் ஊழல் வேலைகளில் ஈடுபட்டதற்காக கைது செய்யப்பட்டிருக்கிறார் என தமிழீழ விடுதலைப் புலிகளின் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவு விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

பொதுமக்கள் தந்த முறையீடுகளின் அடிப்படையில்—

வட்டுக்கோட்டை மேற்கு கண்ணகை அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சுப்பிரமணியம் காசிவிஸ்வநாதன் என்பவரே கைது செய்யப்பட்டிருக்கிறார்.

இவரது சொந்தப் பெயரிலோ, அல்லது மாற்றுப்



பெயரிலோ இவருடன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ். குழுவிடம் நேற்று கொழும்பில் கையளிப்பு

கொழும்பு, அகஸ்ட் 3

சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளை, மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்குமாறு கோரி யுத்தக் கைதிகளின் உறவினர்கள் தலைவர் பிரபாகரனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

கொழும்பில் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரிடம் இக்கடிதத்தை யுத்தக் கைதிகளின் உறவினர்கள் நேற்று கையளித்தனர்.

இதற்கிடையில் —

ஆறாவது நாளாக உண்ணாவிரதம் இருக்கும் யுத்தக் கைதிகளில் மேலும் ஆறு பேரின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே உடல்நிலை பாதிப்புற்ற இருவரின்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தக் கைதிகள் விவகாரம்: சமரச முயற்சியில் அரச அதிபர்

கொழும்பு, ஆக. 3

சாகும்வரை உண்ணாவிரதம் மேற்கொண்டு வரும் யுத்தக் கைதிகள் விவகாரத்தில் மீண்டும் சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில், தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ் அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கடந்த இரு நாட்களாக கொழும்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் யுத்தக் கைதிகள் விடயமாகப் பேச்சு நடத்திய அவர், அரச தரப்பிலிருந்து சாதகமான பதில் ஒன்றுடன் இரண்டொரு தினங்களில் யாழ்ப்பாணம் வருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமது பாதுகாப்பில் உள்ள யுத்தக் கைதிகளை விடுவிப்பதற்கு விடுதலைப் புலிகள் ஏற்கனவே விதித்துள்ள நிபந்தனையை, சில மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ள அரச தரப்பில் இணக்கம் தெரிவிக்கப் பட்டிருப்பதாகவும்—

அதுபற்றி விடுதலைப் புலிகளுக்குத் தகவல் தெரிவிக்க அரச அதிபர் யாழ். திரும்ப

(6 ஆம் பக்கம் பார்க்க)

### ★ இலங்கை இனப்பிரச்சினை

## மற்றொரு சர்வதேச அமைப்பு சமரச முயற்சியில் ஈடுபடத் தயார்!

யாழ்ப்பாணம், ஆக. 3

இலங்கை இனப்பிரச்சினையில் தலையிட்டு, யுத்தத்தில் ஈடுபட்டுள்ள இரு தரப்பினருக்கும் இடையே சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள சர்வதேச சமாதான அமைப்பான ஜனநாயகத்துக்கும், அபிவிருத்திக்குமான இயக்கம் முன்வந்துள்ளது.

பாரிஸைத் தலைமையகமாகக் கொண்ட அந்த அமைப்பு, இது தொடர்பாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகவும்—

ஜனாதிபதியை நேரடியாக சந்திக்க அமைப்பின் பிரதிநிதிகள் திட்டமிட்டுள்ளதாகவும்—

கொழும்பு வந்துள்ள அந்த அமைப்பின் ஆசிய நாட்டுப் பிரதிநிதி கதிரவேல் முருகையா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் பதில் கிடைத்த பின்னரே சமாதான பேச்சுவார்த்தைக்கான தமது முயற்சியை ஆரம்பிக்க முடியும் என்றும்—

விடுதலைப் புலிகளுக்கும் இது தொடர்பாக தாங்கள் தெரிவிக்க இருப்பதாகவும்—

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சில யோசனைகள் தங்களிடம் உள்ளன என்றும்—

(5 ஆம் பக்கம் பார்க்க)

### வீரச்சாவு

யாழ்ப்பாணம், ஆக. 3

எழுதுமட்டுவாள் பகுதியில் நேற்று தவறுதலாக ஏற்பட்ட வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் பெண் போராளியான லெப்டினன்ட் நிலவைச் செல்வி அல்லது சத்தியா (நித்தியானந்தன் பிரேமா பெரிய பண்டிவிரிச்சான் மன்னார்) வீரமரணமடைந்தார். (உ-3)

## மணலாற்றில் புலிகளின் தாக்குதல் தொடரும்!

லண்டன், ஆக. 3

மணலாற்றுப் பகுதியில் கடந்த 25 ஆம் திகதி தாம் நடத்திய தாக்குதல் நடவடிக்கைக்கு 'இதயபூமி 1' என இலக்கமிட்டு விடுதலைப் புலிகள் பெயரிட்டிருப்பதால் இந்த வரிசையில் மேலும் பல தாக்குதல்கள் தொடரும் என எதிர்பார்க்கலாம்.

—இவ்வாறு கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்றின் ஆலோசக ஆசிரியர் ஒருவர் பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இந்தத் தாக்குதலில் பெறுமதி மிக்க ஆயுதங்கள் பலவற்றை புலிகள் கைப்பற்றியிருப்பதால், ஆயுதங்களைக் கைப்பற்றும் நோக்கத்துடனேயே இத்தாக்குதலை புலிகள் நடத்தியிருக்கிறார்களா என்று கேட்டபோது—

''ஆயுதங்கள் கைப்பற்றுவதும் ஒரு நோக்கமாக இருக்கலாம், ஆனால் ''இதயபூமி 1'' என இந்த நடவடிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வேலை வாய்ப்பு

## உதவி உற்பத்தி முகாமையாளர்

**Assistant Production Manager**

மேற்படி வெற்றிடத்திற்கு பின்வரும் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். உங்கள் விண்ணப்பங்களை 10 - 08 - 1993 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

### தகுதி

வயது:

ஆகக் கூடியது 30 — பெண்

கல்வித் தகைமை:

ஆகக் குறைந்தது க. பொ. த (உ/த) சித்தி. (தாவரவியல் அல்லது இரசாயனவியல் ஆகிய பாடங்கள் அடங்க வேண்டும்.)

பல்கலைக்கழகத்தில் இரசாயனம் அல்லது தாவரவியல் ஆகிய பாடங்களை பயின்ற பட்டதாரி ஆயின் அது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

அனுபவம்:

1. உணவு பதனிடல் தொடர்பான அறிவு
2. உணவு பதனிடல் தொழிலில் முன்பு வேலை செய்த அனுபவம் என்பன மேலதிகத் தகுதிகளாகக் கருதப்படும்.

வேதனம்:

அனுபவம், தகுதிகளுக்கு ஏற்ப வழங்கப்படும்.

விண்ணப்பிக்க வேண்டிய முகவரி:

நிர்வாக முகாமையாளர்.
TASTE LINE INDUSTRIES (Pvt) LTD.,
இல. 14, சீனியர் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(26798)

# VACANCY

Save the Children Fund (U. K.) is an International Non Governmental Organisation working for the rights and welfare of children irrespective of nationality, race or religion The following vacancy exist in the Organisation.

**ASSISTANT DISTRICT COORDINATOR JAFFNA**

The post holder will be responsible for the development, implementation of projects and day today management of SCF. project staff She/He will support the District Coordinator in the overall programme management. The successful candidate will have -

a. A minimum of five years experience in Relief-Rehabilitation Development work.
b. Excellent organisational, administrative and financial skill.
c. Fluency in spoken and written Tamil and English. The post holder will be required to live in Jaffna. Minimum salary Rs. 6,205/- plus medical benefits.

**CLOSING DATE TWO WEEKS FROM ADVERTISEMENT OF THE POST**

Please send applications to the SCF Jaffna office:

Save the Children Fund (U. K.)
"Karuvemban Valavu",
Raja Veethy,
Thirunelvely East, Jaffna

(C-5550)

# முதலாவது ஆண்டு அஞ்சலி

## பேதுருப்பிள்ளை வெலிச்சோர்

[பொன்னுத்துரை]

பிறப்பு: 1911—02—16
இறப்பு: 1992—08—02

ஐயா! தெய்வமே!!
ஓராண்டு உருண்டு ஓடினாலும்
ஓயாதையா உம் நினைவலைகள்
தூண்டும் அன்பினால் துயரத்தில் வாடுகிறோம்
துணை எதுவுமின்றி மனை வெளிக்குதையா
பாவக்கறைகள் நீங்கி பரிசுத்தராம் யேசுவின்
பந்தியில் அமர்ந்திட பக்தியுடன் நாங்கள்
பரமனை வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

மிருசுவில்.

(26800)

## நாளை

நாளை புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ் பல்கலைக்கழகத்தின் புவியியற் துறை விரிவுரை மண்டபத்தில் படிவு வீழ்ச்சி செறிவுக் குறிகாட்டி — இலங்கைக்கான ஒரு பிரயோகம் என்ற பொருளிலான கருத்தரங்கு ஒன்று நடைபெறவுள்ளது பேராசிரியர், செ. பாலச்சந்திரன் இவ்விடயம் பற்றி ஆங்கிலத்தில் கருத்துரை வழங்குவார். (க)

o o o

வலி. வடக்கில் உள்ள சகல பதிவு செய்யப்படாத, பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களின் பிரதிநிதிகளுக்கான கூட்டம் ஒன்று நாளை நண்பகல் 12-00 மணிக்கு தெல்லிப்பளையில் உள்ள வலி வடக்கு பிரதேசசெயலர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

## இன்று

பொலிகண்டி கந்தவனத்தில் சுவாமி விவேகானந்தர் சிக்காகோ நூற்றாண்டு நிகழ்ச்சியும், கதிர்காம தீர்த்தோற்சவ வைபவமும் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும். (க)

## விளையாட்டு நிகழ்வுகள்

காந்தி வீரார் விளையாட்டுக் கழகம் சுன்னாகம் சிங்கமாப்பாணர் மைதானத்தில்— 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில்—விலகல் முறையில் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3-30 மணி: ஊரெழு றோயல் வி. க. எதிர் சுழிபுரம் சத்தியா வி. க. "ஏ"

★ 4-30மணி: யாழ். திட்டி பாரதி வி. க எதிர் புத்தூர் வளர்மதி வி. க.

## ஐ.தே.க செயற் குழு இன்று கூடுகிறது

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற் குழு இன்று 3 ஆம் திகதி கொழும்பில் கூடும் போது தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து ஆராயப்படும் எனத் தெரிகிறது.

ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க கூட்டத்துக்குத் தலைமை வகிப்பார்.

## இருவர் கைது

சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தர்மசிறி சேனநாயகாவின் கொழும்பு வாசஸ்தலத்தின் மீது குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக இரு இளைஞர்களை பொரளை பொலிஸார் கைது செய்தனர்.

அடுத்த மாதம் முதலாம் திகதி வரை இருவரையும் விளக்க மறியலில் வைக்கும் படி கொழும்பு மேலதிக நீதிவான் உத்தரவிட்டார்.

## யாருடையவை?

யாழ்ப்பாணம், ஆக. 3

வவுனியா நொச்சிமோட்டையில் அமைந்துள்ள பயணிகள் சோதனை நிலையத்தில் ஆண்கள் அணியும் ஒரு கைக்கடிகாரமும், பெண்கள் அணியும் மூன்று கைக்கடிகாரங்களும், ஒரு சோடி தோடும், 'எஸ்' வடிவில் அமைந்த ஒரு தோடும் கண்டெடுக்கப் பட்டுள்ளதாகவும்—

உரியவர்கள் மேற்படி சோதனை நிலையத்தில் தகுந்த ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக்கொள்ளும் படியும் போக்குவரத்துக் கண்காணிப்புப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (உ)

## விடுபட்ட விவரம்

நேற்றைய உதயனில் வெளிவந்த நாகலிங்கம் பேரின்பநாதனின் மரண அறிவித்தலில், காலஞ்சென்றவர் — திருமதி தியாகராஜா அன்னம்மாவின் பேரமகன் என்ற விவரம் அச்சுத் தவறால் விடுபட்டுவிட்டது. அதனை அறியத்தருகின்றோம்.

# படையினருக்கு ஆதரவாக கொழும்பில் போஸ்டர்கள்

கொழும்பு, ஆக. 3

மாகாணசபையைக் கலைக்கும் படியும்—

ஜே ஆர் - ராஜீவ் உடன்படிக்கையைக் கிழித்தெறியும் படியும்—

நாட்டுக்காக உயிர் நீத்த படையினரை நினைவு கூரும் படியும்—கோரும் கையினால் எழுதப்பட்ட — போஸ்டர்கள் கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் ஒட்டப்பட்டுள்ளன என்று கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

### கலை நிகழ்ச்சிகள்

வறிய மாணவர்களது கல்வி மேம்பாட்டிற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் பல கலை நிகழ்ச்சிகளைக் கடந்த 28ஆம் திகதி புதன்கிழமை மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்தில் நடத்தினார்கள். (க-30)

# கலை நிகழ்ச்சி

யாழ். வர்த்தகர் சங்கம்
சங்க வளர்ச்சிக்காக நடத்தும்
**நிதியுதவி நிகழ்ச்சி**

இடம் :- இளம் கலைஞர் மண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.
காலம்:- 07 08 93 சனிக்கிழமை
நேரம் :- மாலை 3.30 மணிமுதல் இரவு 2.00 மணி வரை

மங்கள இசை:- திரு. என். ஆர். எஸ். ரவீந்திரன்
தவில்:- திரு. என். ஆர். எஸ். சுதாகரன்
(காலஞ்சென்ற தவில் மேதை என். ஆர். சின்னராசாவின் புதல்வர்கள்)

நாதஸ்வர இசை:- திரு. ஏ. முருகானந்தம்
திரு. கே. ஸ்ரீதரன்

பரதநாட்டியம்:- செல்வன் எம். அருள்மோகன்
திருமதி சுகந்தினி தயாசிலன்

முதன் முறையாக

**சாந்தன், ராஜன்ஸ் குழுவினர்**

ஒரே மேடையில் இணைந்து வழங்கும்
**இன்னிசை கானங்கள்**


31 - 07 - 93 நடைபெற வேண்டிய நிகழ்வு 07 - 08 - 93 ஆம் திகதி நடைபெறும்.

வாழ்த்துவோர்:-
சாந்தாஸ் பன்சி
65, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

(26802)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மறைவு: 25 — 05 — 1912



உதிர்வு: 14 — 08 — 1992

அமரர்

## கதிரவேலு கந்தையா

(யா/கல்வியங்காடு சைவ வித்தியாசாலை முன்னாள் ஓய்வு பெற்ற ஆசிரியரும், யா/இருபாலை கந்தவேள் வித்தியாசாலை ஸ்தாபகரும், கோப்பாய் கிராம முன்னேற்றச் சங்க செயலாளரும்)

திதி: 3 - 8 - 1993
(செவ்வாய்க்கிழமை)

இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்து, எண்பது ஆண்டுகள் இப்பாருலகில் பாரோர் புகழ, பணி பல ஆற்றி அமரத்துவம் அடைந்த எங்கள் அன்புத் தெய்வமே; தந்தையே; ஆண்டொன்று ஆனாலும் தங்கள் அன்பு எம் நெஞ்சை விட்டு என்றும் அகலாது, எமது நெஞ்சில் என்றும் நீங்கள் வாழ்ந்து கொண்டிருப்பீர்கள். தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இருபாலை கற்பக விநாயகப் பெருமானை வழுத்தி வேண்டுகின்றோம்.

தங்கள் பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

செந்தில் வாசம்,
அன்பழகன் வீதி,
இருபாலை, கோப்பாய்.

(26796)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருப்புக்காய்ச்சல் குணமாக 3 மாத காலமும் செல்கிறது

## தற்போதைய நிலை குறித்து எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஆக.3

பொதுவாக நெருப்புக் காய்ச்சல் கண்ட ஒருவரை 14 தினங்களில் குணமாக்க முடியும். ஆனால் தற்போது மூன்று மாதங்கள் சென்றாலும் சில நோயாளிகளைக் குணப்படுத்த முடியாமல் இருக்கிறது. மக்களிடையே காணப்படும் போஷாக்கின்மை, மருந்துக்குக் கட்டுப்படும் தன்மையின்றி நோய்க்கிருமிகள் வளர்ச்சிபெறும் நிலை ஆகியவையே இதற்குக் காரணம் ஆகும்.

யாழ். போதனா வைத்திய சாலை வைத்திய நிபுணர் க. சிவநேசன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ். போதனா வைத்திய சாலைப் பதிவேட்டின்படி நெருப்புக் காய்ச்சல் கடந்த வருடத்தைவிட இவ்வருடம தீவிரமாகப் பரவிவரும் ஆபத்து இருந்து வருகிறது.

இந்த வருடம் முதல் ஆறு மாதங்களில் மட்டும் 578 பேர் நெருப்புக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டனர். இவர்களில் இருவர் மரணம் அடைந்துள்ளனர்.

தற்போது கொடுக்கப்படும் மருந்துகளினால் இந்த நோயைப் பூரணமாக கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியாது உள்ளது என்றும் —

நோய்க்கிருமிகள் இம்மருந்துக்கு பழக்கப்பட்ட ஒன்றாக மாறி உள்ளன என்றும் —

இந்நோய்ப் பரிசோதனைக்குரிய மருந்து யாழ். போதனா வைத்தியசாலையில் இல்லாதினால் அனுபவத்தைக் கொண்டும் தற்போதுள்ள மருந்து வகைகளின் உதவியுடனுமே இந்நோய் கண்டுபிடிக்கப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(இ-15)

# பொலீஸ் அதிபர் மூலம் விவசாயிகளுக்கு துப்பாக்கி

காட்டு மிருகங்களிடம் இருந்து தமது பயிர்களைக் காப்பாற்ற விவசாயிகளுக்கு தற்காலிக துப்பாக்கி லைஸன்ஸ் வழங்கும் அதிகாரத்தை உதவிப் பொலீஸ் அதிபர் மற்றும் பொலீஸ் அதிபர்களுக்கு வழங்கும் அவசரகாலச்சட்ட விதியை அரசாங்கம் பிரகடனப்படுத்தியுள்ளது.

இதற்காக கிராமங்களில் உள்ள பொலீஸ் நிலையங்களில் துப்பாக்கிக் களஞ்சியம் அமைக்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

இந்தக் களஞ்சியத்தில் இருந்து துப்பாக்கிகளை தற்காலிக அடிப்படையில் இரவலாக விவசாயிகள் வாங்கிக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(இ-எ)

## அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள்

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இந்து மாமன்றத்தினால் 30-7-93 அன்று நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் பரிசு பெற்ற எண்களின் விவரம்.

முதலாம் பரிசு: 4601

இரண்டாம் பரிசு: 4604

மூன்றாம் பரிசு: 4919

ஆறுதற் பரிசுகள்: 1986, 1779, 1416, 6117, 537, 5065, 1567, 402, 3221, 4240

● பரிசுகளை 30-08-1993இற்கு முன்னதாக கல்லூரி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளவும்.

— நிர்வாகம்.

(26756)

மாவீரர் நினைவாக

# முழங்காவிலில் எழுச்சிக் குடியிருப்பு

யாழ்ப்பாணம், ஆக. 3

பூநகரி ஒல்லாந்தர் கோட்டை தகர்ப்பில் வீரமரணமடைந்த மேஜர் அசோக் உட்பட ஏழுமாவீரர்களினதும் நினைவாக எழுச்சி குடியிருப்பு ஒன்று மன்னார்- முழங்காவிலில் கடந்த 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

மாவட்டத் தளபதி கதிர் மங்கள விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். சிறப்புத் தளபதி ஜான் நாடா வெட்டி எழுச்சிக் கிராமத்தை திறந்து வைத்தார். பொருண்மிய மேம்பாட்டுக்கழக துணைப் பொறுப்பாளர் திலக் ஏழு மாவீரர்களினதும் உருவப் படத்தையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.

தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோர் பாடசாலை மாணவர்களின்'பான்ட்' வாத்திய இசை முழங்க அழைத்து வரப்பட்டனர்.

பிரதான மங்கள விளக்கை வன்னி மாவட்ட பொருண்மிய மேம்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் எம். ஜி. ஆர். ஏற்றி வைக்க மாவீரர்களின் பெற்றோர் திருவுருவப்படங்களுக்கு தீப ஒளியை ஏற்றி வைத்தனர். தொடர்ந்து இடம்பெற்ற வீரவணக்கக் கூட்டத்திற்கு திரு. சாம் தலைமை வகித்தார். பொருண்மிய மேம்பாட்டுக் கழக சார்பில் கவிவரதன் மற்றும் கிளிநொச்சி விவசாய பல்கலைக்கழக உறுப்பினர், மன்னார் மாவட்ட அரசியல் பொறுப்பாளர் ஆகியோர் உரையாற்றினர்.

விழாவில் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டியும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

(இ 9)

## நல்லூர் உற்சவகால நிகழ்வுகள்

நல்லூர் கந்தசாமி கோயில் மஹோற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறும் நிகழ்ச்சிகள்:

★ நாவலர் மணிமண்டப முன்றலில் தெய்வீக இசை அரங்கில் மாலை 6 மணிக்கு ஹம்சானந்தி சேதுபதி இன்னிசைக் கச்சேரி.

★ நல்லூர் ஆலய மேற்கு வீதியில் ஸ்ரீ மூத்தவிநாயகர் கோயிலில் 5-15—6-15 ''பாஞ்சாலி சுயம்வரம்'' எனும் பொருளில் கானகலாநிதி பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா மகாபாரத இசைச் சொற்பொழிவு.

★ நல்லை ஆதீன குருமூர்த்தி மண்டபத்தில்.

பிற்பகல் 2—3 மணிவரை ''மலர்த்தொண்டு'' என்னும் பொருளில் திரு. தி பொன்னம்பலவாணர் சமயச் சொற்பொழிவு.

மாலை 5-30—6-30 மணி வரை பிரசங்கபூஷணம் ந. சிவசண்முகமூர்த்தி 'வீரதீரன் வீரவாகுதேவர்' எனும் பொருளில் கந்தபுராண இசைப் பேருரை.

★ நல்லூர் ஆலயத்துக்கு முன்பாக கச்சேரி—நல்லூர் வீதியில் உள்ள ஸ்ரீ காமாட்சி அம்பாள் மடாலயத்தில் பிற்பகல் 3-00—4-30 மணிக்கு கந்தபுராணபடனம்.

(க-111-126)

## தாண்டிக் குளத்தில் படையினர் கெடுபிடி

யாழ்ப்பாணம், ஆக. 3

தாண்டிக்குளம் இராணுவ சோதனை முகாமில் கடந்த சில தினங்களாக படையினரின் கெடுபிடி அதிகரித்து வருகிறது.

இளைஞர்கள் கம்புகளினால் தாக்கப்படுவதாகவும், பயணிகளின் பொருள்கள் பறிமுதல் செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

| மலர்வு: | | உதிர்வு: |
|---|---|---|
| 15 |  | 04 |
| — | | — |
| 10 | | 07 |
| — | | — |
| 1926 | | 1993 |

அமரர்

### இன்னத்தம்பி முத்துக்குமாரு

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எங்களை அன்போடும், பண்போடும் வளர்த்து நல்வழி காட்டி வாழவைத்த தெய்வமே!

எங்களை விட்டுப் பிரிந்து ஒரு மாத காலமானாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு மாறாது! மறையாது!

உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல நீர்வைக் கந்தன் திருவருளை பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:

துணைவி, நோர்வேயிலுள்ள கிருபாகரன்,
மக்கள், மருமக்கள் பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

தகவல்:
திருமதி முத்துக்குமாரு தங்கம்மா.
நீர்வேலி தெற்கு,

(26794)

திறந்த பல்கலைக்கழகத்தில்

# தொலைக்கல்வி மூலம் பொறியியல் பட்டம்

கொழும்பு, ஆக. 3


தொலைக் கல்வித் திட்டத்தின் கீழ் பொறியியல் பட்டம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை திறந்த பல்கலைக்கழகம் மேற்கொண்டுள்ளதாக பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் தயானந்த விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தொலைக் கல்வித் திட்டத்தின் கீழ் இத்தகைய பொறியியல் பட்டம் வழங்கப்படுவது உலகிலேயே முதன்முறையாக மேற்கொள்ளப்படவிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 23ஆம் திகதியுடன் 13 ஆண்டுகளைப் பூர்த்தி செய்துள்ள இலங்கை திறந்த பல்கலைக்கழகம் இதுவரை 50 ஆயிரத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு 20 பாடநெறிகளில் உயர்கல்வி வசதி அளித்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

(இ-6-5)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம்: | | மறைவு: |
|---|---|---|
| 23 |  | 14 |
| — | | — |
| 11 | | 08 |
| — | | — |
| 1960 | | 1990 |

### சுப்பிரமணியம் இராஜகுமார் (கிளி)

திதி: 3 — 8 — 1993

ஆண்டு மூன்று ஆனாலும் உங்கள் நினைவு எங்கள் மனதை விட்டு அகலாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, மகள் (ஜேர்மனி).

T. சுதா
பழனி ஆண்டவர் லேன்,
கோண்டாவில் கிழக்கு.

(26788)

வலி. கிழக்கு தென்பகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி.

## அறிவித்தல்

வலி. கிழக்கு தென்பகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப்பாய், உரும்பராய், நீர்வேலி கிராமிய வங்கிகளின் 91/92 கணக்காய்வுக்கான மீதிகள் சரி பார்த்தலின் பொருட்டு பின்வரும் திகதிகளில் மேற்கூறப்பட்ட கிராமிய வங்கிகளில் சேமிப்பு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தமது சேமபுத்தகங்கள், நிலையான வைப்பு பத்திரங்களுடன் மேற்படி கிராமிய வங்கிகளுக்கு சமுகம் தந்து தமது கணக்கு மீதிகளை உறுதிப்படுத்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

| திகதி | நேரம் | கிராமிய வங்கியின் பெயர் |
|---|---|---|
| 03 — 08 — 1993 | மு. ப. 8-30 — 4-00 | கோப்பாய் கிராமிய வங்கி |
| 04 — 08 — 1993 | மு. ப. 8-30 — 4-00 | உரும்பராய் கிராமிய வங்கி |
| 05 — 08 — 1993 | மு. ப. 8-30 — 4-00 | நீர்வேலி கிராமிய வங்கி |

சு. கணேசு,
கணக்காய்வாளர்,
கூட்டுறவுத் திணைக்களம், யாழ்ப்பாணம்.

(இ-5589)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

கடைப் பாவனைக்குரிய கண்ணாடி அலுமாரிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு. எஸ். சண்முகலிங்கம், 15/6, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, யாழ்ப்பாணம். (26785)

காவேரி சியாக்காய்ப் பவுடர் பேன், சொடு, அழுக்கு அறவே இல்லாமல் செய்யும். கிடைக்குமிடம்: இலட்சுமி நிலையம், கோப்பாய். குணம் ஸ்ரோர்ஸ், கைதடி, நாவற்குழி தெற்கு. (26775)

ஒரு மாத மணி வாத்துக் குஞ்சுகளும், முட்டை யிடும் தாராக்களும் விற்பனைக்குண்டு. நல்லூர் ஆடியபாதம் வீதியில் புனித சவேரியார் ஆலயத்திற்கு முன்பாக முல்லை அச்சகத்தில் தொடர்பு கொள்ளவும். (26788)

### CLEARANCE SALE

இந்திய சஞ்சிகைகள், மலிவு விலையில் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர். (சி-5528)

### தேவை

½ அங்குலம் இரும்புக்கம்பி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளப் படும். துண்டுக் கம்பிகளாயின் 2½ அடிக்கு மேல் இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு: சக்திப் பகுதி, த. பொ. மே. கழகம், காங்கேசன்துறை வீதி, தாவடிச் சந்தி, தாவடி. (சி-5535)

### தவறிவிட்டது

தட்டாதெரு கலாஜோதி இளைஞர் ஒன்றியத்தின் பற்றுச்சீட்டு புத்தகம் (0401 — 0500 இலக்கமுடையது) ஒன்று ஓட்டுமடம் வீதியில் தவறவிடப்பட்டுள்ளது. தயவு செய்து இதனைக் கண்டெடுத்தவர்கள் ஒன்றியத்தின் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம் (26786)

1 - 8 - 1993 ஞாயிறு பிற்பகல் 3.00 மணியளவில் இரண்டு C R கொப்பிகளுடன் முக்கிய ஆவணங்கள் யாழ். கச்சேரியை அண்டிய பகுதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து இலக்கம் 59, விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம். சன்மானம் வழங்கப்படும். (6397)

### ஆண்டு - 5 புலமைப்பரிசில்

கணிதம், தமிழ், மாதிரி வினாத்தாள்கள்-85 கொண்ட அரிய பயிற்சி நூல் (அச்சேற்றப்பட்டது) விற்பனையாகின்றது; இந் நூல் ஒன்றேதிறமைச் சித்திக்கு உத்தரவாதம் அளிப்பது. வெளியீடு: கு. வி அச்சகம் புத்தக விற்பனை நிலையம், 217, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (6394)

## படகோட்டிகள் உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஆக; 3

கிளாலி — பூநகரிப்படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள், படகோட்டிகள் அனைவரையும் இன்று செவ்வாய் காலை 10 00 மணிக்கு அல்லிப்பளை படகுத்துறைக்கு கலந்துரையாடல் ஒன்றில் பங்குபற்றுவதற்காக வருமாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் கேட்டுள்ளார். (இ)

## உழைப்பாளரை இழந்த குடும்ப விவரம் சேகரிப்பு

உழைப்பாளரை இழந்து வறுமை நிலையில் தமது குழந்தைகளைப் பராமரிக்க முடியாது உள்ள குடும்பங்கள் பற்றிய விபரத்தினை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் மேலதிக அரசாங்க அதிபரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வன்செயல் அல்லது இயற்கை மரணம், காணாமற் போதல், மற்றும் வேறு காரணங்களால் உழைக்கும் ஆற்றலை இழத்தல், உழைப்பாளரால் கைவிடப் பட்டிருத்தல் ஆகிய காரணங்களில் ஒன்றால் உழைப்பாளரின் வருமானத்தை இழந்து குழந்தைகளை பராமரிக்க முடியாத நிலையில் உள்ள வறிய குடும்பங்களின் விபரங்களே திரட்டப்பட உள்ளன. விபரங்களை கிராம சேவகர்களூடாகத் திரட்டி மேற் குறிப்பிட்ட திகதிக்கு முன் யாழ். செயலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலர்கள் கேட்கப்பட்டுள்ளனர். (இ-162)

## சிற்றூழியர் பற்றாக்குறை

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் சிற்றூழியர்களுக்கு பெரும் பற்றாக் குறை நிலவி வருகிறது.

### வைத்திய சேவை

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையினர் நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு ஆலயத்திற்கு அருகில் கோவில் வீதியில் உள்ள தமது பணிமனையில் காலை தொடக்கம் மாலை 9-00 மணிவரை வைத்திய சேவையை நடத்தி வருகின்றார்கள். (க-30)


விற்பனையாகிறது!

**கலைமுகம்**

(காலாண்டு சஞ்சிகை)

**பூபாலசிங்கம்**

புத்தக நிலையம், யாழ்ப்பாணம்.

(சி/5547)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி அழைப்பு



மலர்வு: 23 — 07 — 1950

உதிர்வு: 04 — 07 — 1993

### மரியதாஸ் சந்திரமலர்

(இளைப்பாறிய ஆசிரியை)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம். இவரின் ஆத்ம இளைப்பாற்றிற்காக இன்று (3 - 8 - 93) செவ்வாய்க்கிழமை கோண்டாவிலிலுள்ள எமது இல்லத்தில் நினைவஞ்சலி நடைபெறும். அத்தருணம் தாங்களும் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக பிரார்த்திக்குமாறு வேண்டுகிறோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
அம்மா, சகோதரர்கள், கணவர்,
மைத்துனர்மார், மைத்துனிமார்,
உறவினர்கள்.

T. பாபு,
ஞான வைரவர் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(26790)

## வீட்டுக்கிருத்திய அழைப்பு



தோற்றம்: 22 — 01 — 1934

மறைவு: 02 — 07 — 1993

கடந்த (02 - 07 - 1993) வெள்ளியன்று கொழும்பில் சிவபதமடைந்த எங்கள் குலதெய்வம்

### அமரர் இராமலிங்கம் கந்தையா சுப்பிரமணியம் (R. K.)

(பணிப்பாளர் - கபுகலிதன்ன பொருந்தோட்டயாக்கம், முன்னாள் தோட்ட குமாஸ்தா - தொழிற் சங்கத். தலைவர்)

அவர்களின் வீட்டுக் கிருத்தியம் 04 - 08 - 1993 புதன்கிழமை காலை 10-00 மணியளவில் அன்னாரின் சுழிபுரம் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்பத்தினர் சகிதம் சமூகம்தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இப்படிக்கு:
அன்னாரின் குடும்பத்தினர்.

திசமனை,
சுழிபுரம்.

பி. கு. இவ் அழைப்பிதழை நேரடி அழைப்பாக ஏற்று கலந்து கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டிக் கொள்கின்றோம்.

(26791)

# நினைவஞ்சலி

## 9ஆம் ஆண்டு



மண்ணில்: 09 — 03 — 1931

விண்ணில்: 13 — 12 — 1984


### திருமதி வ. சின்னப்பிள்ளை

குறையொன்றும் காணாத வாறே இந்தக்
குவலயத்தில் ஐம்பத்து மூன்றாண் டாக
நிறைசேர்ந்த வாழ்வெமக்குத் தந்திட்டாலும்
நின்மதிகாம் ஒன்றைமட்டும் பறித்துச் சென்றீர்
கறையேது மில்லாநீர் வயந்த பிள்ளை
கடுமையும்மை வந்தடைந்தான் கண்டீரோ நீர்?
பிறை சேர்ந்த பெருமானின் நிழல் சார்ந்தீர்
பெரும்பேறு பெற்றுவிட்டீர்! பிதற்றி வாழ்வேன்!

189, ஆசீர்வாதம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

(26753)

## 3ஆம் ஆண்டு



மண்ணில்: 14 — 12 — 1959

விண்ணில்: 07 — 08 — 1990

### அமரர் வ. வரததாசன்

திதி: 03 — 08 — 1993

அப்பாவுக் காதரவே யில்லை யென்றே
அடித்தளங்கள் போட்டிருந்த செல்வா! நீயும்
எப்பாலே சென்றனை எத் திசையால் போனாய்?
எங்கே நீ இருக்கின்றாய்? என்ன செய்வாய்?
எப்போதும் உன் நினைவில் அழிக்கும் இந்த
முதிய தந்தை படும்பாட்டை எவர்க்குச் சொல்வேன்
தப்பாது நீ மீண்டும் வரவே வேண்டும்!
தயங்காமல் ஓடோடி வந்திடையா!

பேதலித்திருக்கும்:
கணவர்—தந்தை—கு. வஸ்தியாம்பிள்ளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

## சதியை நிறுத்துக!

மணலாறு மணிகிண்டி மலையில் விடுதலைப் புலிகள் நடத்திய வெற்றிகரத் தாக்குதல், கொழும்பில் இராணுவ வட்டாரங்களில் மட்டுமன்றி அரசியல் வட்டாரங்களிலும் பேரதிர்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அத்தோடு நிற்காமல் தெற்கின் சகல்துறைகளிலும் மணிகிண்டிமலை தாக்குதல் எங்கும் பேசப்படும் முக்கிய சங்கதியாகவும் அரசினதும், படையினதும் செயற்பாட்டில் நம்பிக்கை இழக்கத் தூண்டும் விடயமாகவும் ஆகியுள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்து விசாரணை நடத்துவதற்கென இராணுவத் தளபதி தனியான நீதிமன்றம் ஒன்றை நியமித்திருக்கிறார்.

அதேவேளை —

கட்டைக்காட்டுத் தாக்குதலின் பின்னர் மணிகிண்டிமலையிலும் விடுதலைப் புலிகள் பெருவெற்றி ஈட்டியிருப்பது போரில் இராணுவத்தால் வெல்ல முடியாது என்ற உண்மையை பல தரப்பினரையும் உணரச் செய்துள்ளது.

அரசாங்கப் படைகளின், ஆளணி ஆயுத பலங்களை அதிகரிப்பதற்காக, நாட்டின் வளங்களில் பெரும் பகுதி இராணுவச் செலவுக்கே விரயமாக்கப்பட்ட போதிலும், இராணுவம் இப்படி அடுத்தடுத்துத் தோல்வி கண்டு வருவது குறித்துப் பல வட்டாரங்களும், அதிருப்தியும், சலிப்பும் அடைந்துள்ளன.

இவற்றுக்கெல்லாம் மத்தியில் —

தமிழர்கள் வாழும் மணலாறுப் பகுதியில் தமிழர்கள் அல்லாதோரை அரசு குடியமர்த்தியதாலேயே அப்பகுதி தாக்குதல் பிரதேசமாக மாற வேண்டியதாயிற்று என்பதையும் தெற்கு உணரத் தொடங்கி உள்ளது.

அதற்கடுத்து, இராணுவத்தினரும், அமைச்சர்களும் எவ்வளவுதான் தைரியமூட்டிய போதிலும், ஆறுதல் கூறிய போதிலும் மணலாறுப் பகுதியில் குடியமர்த்தப்பட்ட வெளியார் அங்கு வாழ்வதற்கு அஞ்சுகிறார்கள் என்ற தன்மையும் வெளிப்படையாகி உள்ளது.

வடக்கையும், கிழக்கையும் ஒரே நிலப்பரப்பாகத் தொடுப்பது மணலாறுப் பிரதேசம். அது தமிழர் தாயகத்தின் இதயபூமி. அங்கே சிங்களவர்களைக் கொண்டு வந்து குடியேற்றுவதும், அதனை ஒரு சிங்களப் பிரதேசமாக்குவதும், அதன் மூலம் வடக்கையும் கிழக்கையும் துண்டித்துவிடுவதும் கொழும்பு அரசாங்கத்தினதும், சிங்களப் பேரினவாதத்தினதும், அவை இரண்டினதும் கருவிகளான இராணுவத்தினரினதும் சூழ்ச்சி மிகுந்த திட்டமாகும். மணலாறுப் பகுதியை இராணுவ மயமாக்குவதும் அந்தத் திட்டத்தின் ஓர் அம்சமே!

தமிழர் தாயகம், வடக்கு-கிழக்கு இணைந்திருப்பது என்ற கோட்பாடுகளை அரசியல் பேச்சுக்களில் தமிழர் முன்வைக்காதிருக்கும் பொருட்டு நடைமுறையில் துண்டாடிவிடுவதே அரசின் நோக்கம்.

ஆனால் தமிழர்கள் தமது இதயபூமியை ஆக்கிரமிப்பதையோ, கபளீகரம் செய்வதையோ, தாயகம் துண்டாடப்படுவதையோ ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்.

வடக்கு - கிழக்கு துண்டாடப்படுவதை தமிழர்கள் ஏகோபித்த குரலில் எதிர்க்கிறார்கள், ஒப்புக்கொள்ளமாட்டார்கள் என்பதை தெரிந்து கொண்டு அரசு இப்படி ஒரு சதிச் செயலில் இறங்கி உள்ளது. அது வெற்றியளிக்காது என்பதைக் கொழும்பு அரசும் ஏனையோரும் உணர்ந்து கொள்வது நல்லது. அதற்கான சமிக்ஞையாக மணிகிண்டிமலைத் தாக்குதலைக் கருதுவது மேலும் பயன்தரும்.

---

ஏனைய நடவடிக்கைகளை நிறுத்தி

## வடக்கு போரின் பக்கம் முழு கவனத்தையும் திருப்புக

### அரசுக்கு எதிரணி வற்புறுத்து

லண்டன், ஆக. 3

அரசாங்கம் தனது நடவடிக்கைகள் அனைத்தையும் உடனடியாக நிறுத்திவிட்டு, தனது முழுக் கவனத்தையும் வடக்கு போரின் பக்கம் திருப்ப வேண்டும்:

— இவ்வாறு ஐனநாயக ஐக்கிய தேசிய முன்னணி அரசை வற்புறுத்தியிருக்கிறது.

மண்கிண்டிமலை முகாம் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் அரச படைகளுக்கு ஏற்பட்ட இழப்புப் பற்றிய செய்திகள் வெளியாகியதை அடுத்து ஐனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் துணைத் தலைவர் ஒருவர் கருத்து வெளியிடுகையில் இவ்வாறு குறிப்பிட்டார்.

''அரசாங்கம் தனது பிரசார நடவடிக்கைகளை நிறுத்திவிட்டு, புலிகளுடன் மோதுவதற்கு முழு நாட்டையும் யுத்தத்துக்குத் தயாராக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவி கிறிமாவோ பண்டார நாயக்கா கூறியிருப்பது தெரிந்ததே.

(உ-3)

## மன்னாரில் துக்கம் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 3

மன்னார் சறிச்சட்டிப்பாலத்தில் எதிர்பாராத விதமாக இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட நேரடி மோதலில் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 4 போராளிகளுக்கும் அஞ்சலி செலுத்தி மன்னாரில் கடந்த வியாழக்கிழமை துக்கதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

(உ-3)

## பட்டதாரி ஆசிரியர்கள்: ஐம்பது பேருக்கு நியமனம்

பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக 50 பேர் அடுத்த மாதம் முதலாம் திகதி முதல் நியமனம் பெறவிருக்கின்றனர்.

யாழ். பிரதேச கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த வருடம் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கிய சமயம்.

கொட்டகலையில் நடந்த தேர்முகப் பரீட்சைக்கு சமூகமளிக்காததாலும் —

போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியாமல் போனதாலும் —

போட்டிப் பரீட்சையில் தோற்றி புள்ளிகள் கிடைக்காத காரணத்தாலும் —

நூற்றுக்கணக்கான பட்டதாரிகள் ஆசிரியர் நியமனத்தை பெற முடியாது போனது தெரிந்ததே.

இவ்வாறு பாதிக்கப்பட்டோர் குறித்து யாழ். பிரதேச கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் கல்விச் சேவை ஆணைக்குழுத் தலைவர் ஜோர்ஜ் மெண்டிஸுடன் பேச்சு நடத்தியதையடுத்து அவர்களில் 50 பேருக்கு நியமனம் வழங்க அனுமதி கிடைத்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

---

★ தற்கொலைப் படைத் தாக்குதல்:

## விசாரணைகளில் முக்கிய திருப்பமாம்!

கொழும்பு, ஆக. 3

கொழும்பில் விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையின் நடவடிக்கைகள் தொடர்பான விசாரணைகளின் முக்கிய திருப்பம் ஏற்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

கடந்த வாரம் பொலீஸார் கொழும்பில் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளின் போது கைது செய்யப்பட்ட முக்கிய நபர் ஒருவர் கொடுத்த தகவல்களை அடுத்தே விசாரணைகளில் திருப்பம் ஏற்பட்டுள்ளதாம்.

கொலைப்பட்டியலில் இடம் பெற்றுள்ள முக்கிய பிரமுகர்களின் பெயர்கள், தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய இடங்கள் பற்றிய விவரங்களும் அந்த நபரிடம் இருந்து பெறப்பட்டதாகவும் புலனாய்வுத்துறை அறிவித்துள்ளது.

## சடலம் அடையாளம் காணப்பட்டது

யாழ்ப்பாணம், ஆக. 3

இளாலிக் கடற் பிராந்தியத்தில் கடந்த வியாழன் அதிகாலை கடற்படையினரின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களில் மற்றும் ஒரு பெண்ணின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அடையாளம் காணப்பட்டது.

நெல்லியடியைச் சேர்ந்த மதுரநாயகம் அமிர்ததாயகி (வயது 39) என்ற பெண்ணின் சடலத்தை அவரது கணவர் அடையாளம் காட்டி பெற்றுக் கொண்டார். அடையாளம் காணப்படாத மற்றொரு பெண்ணின் சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உ-15

### மற்றொரு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்தார்.

''வடபகுதிக்கு அத்தியாவசியப் பொருள்கள் உட்பட பல பொருள்கள் எடுத்துச் செல்லப்படுவது தடை செய்யப்படிருப்பது குறித்தே நாம் அதிக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

''இலங்கையில் பல சட்ட நிபுணர்கள் இருந்தும், அடிப்படை உரிமை ஒன்றை மீறும் இவ்வாறான தடைக்கு எதிராக எவரும் சட்ட நடவடிக்கை ஒன்றில் இறங்காதது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது'' என்றார் அவர்.

இத்தடைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக் குறித்து தாங்கள் ஆராய்ந்து வருவதாகவும் அவர் சொன்னார். (உ-3)

### மணலாற்றில்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கைக்கு அவர்கள் பெயரிட்டுள்ளனர்; தமது தாயகத்தை இணைக்கும் பிரதேசத்தில் சிங்களக் குடியேற்றம் நடப்பதாகக் குற்றம் சாட்டும் புலிகள் அதனை ஆட்சேபித்தே தமது தாயகத்தின் இதயம் போன்ற பூமியில் இத்தாக்குதலை நடத்தியிருக்கிறார்கள்— என்று பதிலளித்தார்.

### தலைவர்:.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமை மோசமடைந்திருக்கிறது.

பல கைதிகள் அசைவதற்கு கஷ்டப்படுவதாகவும், இன்னும் பலர் பேசமுடியாத அளவுக்கு பலவீனம் அடைந்திருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது

எனினும் இவர்கள் எல்லோரும் இன்று காலை 11 மணியுடன் தண்ணீர் அருந்துவதை நிறுத்தப்போவதாக உறுதியுடன் கூறினர்.

தம்மை விடுவிப்பது தொடர்பாக அரசு உருப்படியான நடவடிக்கை எடுக்காதது குறித்தும், தமது உண்ணாவிரதம் குறித்து அரச வெகுசன தொடர்பு சாதனங்கள் தகவல் வெளியிடாமல் இருட்டடிப்புச் செய்வது குறித்தும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

இதேவேளை யுத்தக் கைதிகளின் உறவினர்கள் கடந்த மாத மத்தியில் எழுதிய கடிதங்கள் இல செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினரூடாக நேற்றுக் கிடைத்தன.

அந்தக் கடிதங்களை வாசித்துப் பார்த்த யுத்தக் கைதிகள் அழுதனர். (அ-உ-3 6)

---

மன்னன் விஜயனின் காலத்தின் பின்

## புத்தளம் மக்கள் முதற் தடவையாக அகதிகளாகி விட்டனர்

### புலிகளின் தாக்குதல் குறித்து அஸ்வர்

கொழும்பு, ஆக. 3

புத்தளம் மாவட்டம் இலவங்குளத்தில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் புத்தளம் மக்கள் அகதிகளாகி உள்ளனர். மன்னன் விஜயனின் காலத்தின் பின்னர் புத்தளம் மக்கள் அகதிகளாகியது இதுவே முதல் தடவை.

முஸ்லிம் சமய கலாசார இராஜாங்க அமைச்சர் அஸ்வர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த மாதம் 24ஆம் திகதி புத்தளம் மாவட்ட வில்பத்து வனவிலங்கு சரணாலய எல்லைப் பகுதியில் உள்ள இலவங்குளம் பொலீஸ் காவலரண் மீது புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலை அடுத்து 215 குடும்பங்களைச் சேர்ந்த 950 பேர் அப்பகுதியில் இருந்து அகதிகளாக வெளியேறி உள்ளனர்.

அகதிகளைச் சந்தித்த பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலே அஸ்வர் மேற்கண்டவாறு கூறினார்.

தாக்குதலை அடுத்து வெளியேறியவர்கள் தற்போது புத்தளம், கரைதீவு, ஷேக் அலாவுதீன் பாடசாலையில் தங்கி உள்ளனர்.

இவர்களை இவர்களது சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்பும் முயற்சிகள் இதுவரை கைகூடவில்லை.

அதே சமயம், புலிகளின் தாக்குதல் மீண்டும் நடைபெறாது தடுப்பதற்காக கூட்டுப்படைத் தளபதி ஜெனரல் ஹமில்டன் வனசிங்க இலவங்குளம் பகுதியில் இராணுவ பாதுகாப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 24ஆம் திகதி இலவங்குளத்தில் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதலில் .0 பொலீஸார் கொல்லப்பட்டது தெரிந்ததே.

அதற்கு முதல் சுமார் ஒரு வார காலத்துக்கு முன்னர் இதே இடத்தில் புலிகள் நடத்திய மற்றொரு தாக்குதலில் 5 பொலீஸார் கொல்லப்பட்டிருந்தனர்.

[இ]

## பதவி துறக்க போவதில்லை என்கிறார் சிறிசேன கூரே

கொழும்பு, ஆக. 3

ஐ. தே. க. வின் பொதுச் செயலாளர் பதவியைத் துறக்கப்போவதில்லை என்று வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் சிறிசேனகூரே தெரிவித்துள்ளார்.

திரு. சிறிசேனகூரே மூன்று வாரகால வெளிநாட்டுப் பயணத்தின் பின்னர் கடந்த வியாழக்கிழமை நாடு திரும்பி இருந்தார்.

இவர் நாடு திரும்பியதும் பொதுச் செயலாளர் பதவியைத் துறக்கலாம் என்று ஏற்கனவே ஊகம் தெரிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.

தம்மைப் பற்றியும், தமது அரசியல் எதிர்காலம் பற்றியும் சில பத்திரிகைகள் வெளியிட்ட ஊகங்களையும், அரசியல் வட்டாரங்களில் நிலவிய வதந்திகளையும் அவர் முற்றாக நிராகரித்தார்.

''நாட்டுக்கு நல்லதையே செய்வேன். அதற்கு ஜனாதிபதி விஜேதுங்காவின் கரத்தைப் பலப்படுத்துவது முக்கியமானது.'' — என்றார் அவர்.

(இ-உ-எ)

---

உ



## விரைந்தோடி வாராய்!

இராகம்:- கரகரப்பிரியா தாளம்:- ஆதி

பல்லவி

வாராய் வரந்தர வடிவேலா — புகழ்ப்
பேராய் விளங்குநல்லை மாநகர் மால்மருகா

அநுபல்லவி

பேராயிரம் சொல்லி பெருமானே! உன்நாமம்
பாராயணம் பண்ணும் பக்தருக் கிரங்கி
(வாராய்)

சரணம்

நாராயணன் மருகா நற்றமிழ்க் குமரனே
சூரர்தக் பகைமுடித்த சேவற் கொடியோனே
கூரான வேலோடு கோலமயில் மீதமர்ந்து
சீரான நல்லூரிற் செவ்வேளே விரைந்தோடி
(வாராய்)

— நாயன்மார்கட்டு இ. குகதாசன்

---

**வான் தொட்ட நெடு மரமும் வளம் கொண்ட நில நீரும் - இவ் வையகத்தில் அவசியம் காண்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7 எம். பிக்கள் கட்சி மாறினர்

புதுடில்லி, ஆக. 3

அஜித்சிங் தலைமையிலான ஜனதாதள் [அஜித்சிங் பிரிவு] கட்சியிலிருந்து விலகிய ஏழு எம். பிக்கள் நேற்று இந்திரா காங்கிரஸ் கட்சியில் சேர்ந்தனர்.

இந்த 7 உறுப்பினர்களும் காங்கிரஸ் கட்சியில் இணைந்ததை அடுத்து 532 எம். பிக்களைக் கொண்ட இந்திய நாடாளுமன்றத்தில் காங்கிரஸ் கட்சியின் பலம் 257 ஆக உயர்ந்தது. [உ-த]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராசமுத்து திக்கம் செல்லையாபிள்ளை

திருமதி இராசமுத்து திக்கம் செல்லையாபிள்ளை 02-08-93 இல் காலமானார்.

இவர் பொலிகண்டி கந்தவன ஆதீனகர்த்தர் காலஞ்சென்ற திக்கம் செல்லையாபிள்ளையின் அன்பு மனைவியும், கந்தவன ஆலய ஆதீனகர்த்தர் காலஞ்சென்ற யோகேந்திரன், திருமதி நாகபூசனி, பார்ப்பதி, பொன்னம்மை (இளைப்பாறிய இசை விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை), யோகாம்பிகை (இளைப்பாறிய இசை ஆசிரியை, இராமநாதன் கல்லூரி), சிவயோகநாயகி (உப அதிபர், ஆசிரிய பயிற்சிக் கலாசாலை, கோப்பாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற குமாரசாமி, காலஞ்சென்ற பத்மநாதன், இராமநாதன், கமலாம்பிகை ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற இரத்தினம், இராசக்கோன், திரவியம் ஆகியோரின் பிரிய சகோதரியும், ஜெயமனோகரி, விஜந்தாரணியம் (கனடா). செல்லையாபிள்ளை (ஓமான்), குழந்தைவேலு (கனடா), ரஞ்சன் (கனடா), ரமேஷ் (கனடா), குமரன் (இந்தியா), சுமதி (கொழும்பு), கார்த்திகாயினி (கொழும்பு), விஜயலட்சுமி (கனடா), தங்கராணி (ஓமான்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும்; ஜனகன், அபிராமி, தாட்சாயினி, சங்காசுதன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் அவரது இல்லத்தில் 02-08-93 அன்று மாலை 4 மணிக்கு நடைபெற்று, ஊரணி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பார்ப்பதி (இராசர்)
திக்கம் செல்லையாபிள்ளை

''கந்தவனம்''
பொலிகண்டி.

[26792]

## மேரி சீதேவி ஆறுமுகம்

அரியாலை மேற்கு கலைமகள் வீதியைச் சேர்ந்த மேரி. சீதேவி ஆறுமுகம் 31 - 7 - 93 சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திய ஜீவன் அடைந்துவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பீற்றர் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், தாமோதரம்பிள்ளை (பதில் பிரதம கணக்காளர், தொலைத் தொடர்பு தலைமை அலுவலகம்), திருமதி சிவாம்பிகை ஜீவானந்தம் (இளைப்பாறிய ஆசிரியை நல்லூர் தெற்கு ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தியாலயம்), நவகீதகிருஷ்ணன் (பொறியியலாளர் கட்டார்), திருமதி யேசுமலர் டானியேல் (இளைப்பாறிய விடுதி மேற்பார்வையாளர், நவீல்ட் பாடசாலை - கைதடி), திருமதி ஜெயமலர் அமிர்தலிங்கம் (ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி பிலோமினா - தாமோதரம்பிள்ளை (இளைப்பாறிய ஆசிரியை), எஸ். பி. ஜீவானந்தம் (இளைப்பாறிய தலைமை ஆசிரியர் பரி. யோவான் கல்லூரி), திருமதி ஞானமணி - நவநீதகிருஷ்ணன், காலஞ்சென்ற தோமா டானியல் (கொத்தணி அதிபர், ஏழாலை), திரு. சி. அமிர்தலிங்கம் (தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம் - தாவடி) ஆகியோரின் அன்பு மாமியாரும், வைத்திய கலாநிதி P. J. ஜீவானந்தம் (அரசினர் வைத்தியசாலை கோப்பாய்), J. A ஜீவானந்தம் ஹட்டன் நாஷனல் வங்கி கொழும்பு) J. J. ஜீவானந்தம் (மக்கள் வங்கி நுவரெலியா), A. T ஜீவானந்தம் (பொறியியலாளர், R. C. & D. C. கொழும்பு), செல்வ ஜெபரூபி ஜீவானந்தம் (ஆசிரியை சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), செல்வி இந்திரரூபி ஜீவானந்தம் (பயிற்சி மாணவி கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி), திருமதி கிறேஸ் சுமதி ஜீவானந்தம் (ஆசிரியை மண்டைதீவு R. C பாடசாலை) திருமதி மஞ்சுளா ஜீவானந்தம் [கொழும்பு], தா. சத்தியசீலன் [ஆஸ்திரேலியா], தா. யேக்கப் யேசுரத்தினம் (கொழும்பு), தா. சாந்திக்குமார் (பாஸ்ரர்), தாபேஸர் பவானி (வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்), ந. ஞானசுதன் (மருத்துவபீடம் யாழ். பல்கலைக்கழகம்], ந. ஞானரஞ்சன் (பொறியியல் பீடம் மொறட்டுவ பல்கலைக்கழகம்). ந ஞானகாருணியன். செல்வி ந. ஏஞ்சலின் நவந்தினி, செல்வி ந. நவதர்சினி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], D G. ஆனந்தன், (கணனி பொறியியலாளர், கொழும்பு), செல்வி டா. டொறந்தி மகிளினி (நுண்கலைப்பீடம், யாழ். பல்கலைக்கழகம்], செல்வி அ. ஜெயந்தி [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி], பரியோவான் கல்லூரி மாணவர்களான அ. சுஜீவன், அ. ஜெகஜீவன், அ. ரஜீவன் ஆகியோரின் அன்புப் பேத்தியும், யோசப் ஜெபக்குமார் [யாழ்ப்பாணம்] காலஞ்சென்ற போல் அருள்குமார் [யாழ் பாணம்], கொழும்பில் வசிப்பவர்களான சாமுவேல் தேவகுமார், சொலமன் பிறேம்குமார் ஆகியோரின் அன்புப் பூட்டம்மாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 4 - 8 - 93 புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லூர் பரி. யாக்கோபு ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
எஸ். பி. ஜீவானந்தம்
(மருமகன்)

37, கலைமகள் வீதி,
அரியாலை மேற்கு.
யாழ்ப்பாணம்.

[2680]

# இந்தியாவில் நடக்கவிருந்த அனைத்து தேர்தல்களும் ரத்து!

## அரசு - தேர்தல் அலுவலகம் மோதல முற்றியது

சென்னை, ஆக. 3

பழனி, ராணிப்பேட்டை, பெருந்துறைத் தொகுதிகள் உட்பட இந்தியாவில் நாடாளுமன்ற மற்றும் சட்டமன்றத் தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் அனைத்தும் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

அரசியலமைப்பு மற்றும் தேர்தல் சட்ட விதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதாக மத்திய அரசு தெளிவான வாக்குறுதியை வழங்கும் வரை நாட்டில் தேர்தல் எதையும் நடத்தப் போவதில்லை என்று தேர்தல் அலுவலகம் அறிவித்துள்ளது.

தேர்தல் அலுவலகத்தின் கடமைகளை நிறைவேற்ற முடியாதபடி வேண்டும் என்றும், வெளிப்படையாகவும் மத்திய அரசு தடுத்து வருவதாக நேற்று புதுடில்லியில் வெளியிட்ட செய்திக் குறிப்பொன்றில் தேர்தல் அலுவலகம் குற்றஞ்சாட்டியுள்ளது.

தேர்தல் பணிகளில் ஈடுபடத் தேவையான ஊழியர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் ஆணையாளருக்கு முழு உரிமை உண்டு என்றும் —

மத்திய மாநில அரசுகள் அதில் தலையிட உரிமை இல்லை என்றும் அச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக தலைமை தேர்தல் அதிகாரி திரு. டி. என். சேஷன் பிரதமர் ராவை இரு முறை சந்தித்ததாகவும்—

இவ்விடயத்தில் விரைவில் தெளிவான முடிவொன்றை எடுக்க பிரதமர் உறுதி அளித்ததாகவும் திரு. சேஷன் அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

தற்போது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலைமைக்கு மத்திய அரசே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என்றும் —

பிரச்சினைக்குத் தீர்வு காணப்படும் வரை அரசியலமைப்புச் சட்டத்தில் குறிப்பிடப்பட்ட தமது கடமைகளை நிறைவேற்றுவது இயலாது என்பதால் அனைத்து தேர்தல்களையும் கால வரையறையின்றி ஒத்தி வைப்பதாகவும் —

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த உத்தரவையடுத்து தமிழ்நாடு, கேரளா, ஆந்திரா மாநிலங்களில் 3 நாடாளுமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தல்கள் [illegible] மேற்கு வங்காளம் ஆகியவற்றில் மொத்தம் 9 இடங்களுக்கான ராஜ்ய சபைத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

பழனி, ராணிப்பேட்டை இடைத் தேர்தல்கள் இம் மாதம் 19 ஆம் திகதியன்றும் பெருந்துறைத் தொகுதிக்கான இடைத் தேர்தல் அடுத்த மாதம் 4 ஆம் திகதியும் நடைபெறுவதாக இருந்தன.

இறுதியாகக் கிடைத்த தகவலின்படி பழனி, ராணிப்பேட்டை தொகுதி தேர்தல்கள் டிசம்பர் 18 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்படுகிறது. (உ-த)

## ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஆக 3

கிளாலி - பூநகரி படகுச் சேவையில் ஈடுபட்டுள்ள படகு உரிமையாளர்கள், படகோட்டிகள் ஆகியோருக்காக இன்று காலை 10 மணிக்கு அல்லிப்பளை படகுத் துறையில் நடைபெறவிருந்த கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு ஒத்திவைக்கப் பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதித்துறையின் யாழ். மாவட்ட வருவாய்ப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார்.

(முன்னர் வந்த செய்தி 4 ஆம் பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது.) (உ)

## யுத்தக் கைதி..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பதாகவும் அறியவருகிறது. ஆயினும் யாழ். அரச அதிபருடன் அரசின் தூதராக யாரேனும் பிரதிநிதிகள் இங்கு வருவார்களா என்பது பற்றி எதுவும் தெரியவரவில்லை.

இதற்கிடையில் —

யுத்தக் கைதிகளை உண்ணாவிரதம் மேற்கொள்ள வேண்டாம் என்றும் —

அது விடயமாகத் தாம் விரைவில் யாழ். வர இருப்பதாகவும் யாழ். அரச அதிபர் கொழும்பில் இருந்து தகவல் அனுப்பியுள்ளார்.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு மூலமாக யாழ். செயலகத்துக்கு அனுப்பிய செய்தி ஒன்றில் அவர் இத் தகவலை தெரிவித்துள்ளார்.

(உ-5-162)

## பிரயோக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனை அடுத்தே இரு வினாத்தாள்களையும் புதிதாகத் தயாரித்து புதிய பரீட்சைகளை நடத்த முடிவு செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

நேற்று குடாநாட்டில் பிரயோக கணிதம் I பாடத்திற்குத் தோற்றிய மாணவர்கள் தமது வினாத் தாளில் பிரயோக கணிதம் II இற்குரிய வினாக்களும் இடம் பெற்றிருப்பதை அவதானித்ததும் குழப்பம் அடைந்தனர்.

இதனால் பரீட்சை நிலையங்களில் பெரும் பரபரப்புக் காணப்பட்டது.

(உ-8-162)

## ஊழல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு வைத்திருந்தவர்கள். இவர் பற்றி மேலதிக தகவல் அறிந்தவர்கள் போக்குவரத்து கண்காணிப்பு பிரிவின் கோண்டாவில் ரயில் நிலைய வீதியில் அமைந்துள்ள விசாரணைச் செயல [illegible] பொதுமக்களை போக்குவரத்து கண்காணிப்பு பிரிவு கேட்டுள்ளது.

# ஈழ அகதிகள் கப்பலுடன் இந்திய கடற் படைக் கப்பல்!

## திருகோணமலைக்கு வரும்

தமிழகத்திலிருந்து தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ள 12 ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகளில் முதல் கட்டமாக ஆயிரத்து 200 பேர் எதிர்வரும் 12 ஆம் திகதி 'நிக்கோபர்' கப்பல் மூலம் திருகோணமலையைச் சென்றடைவர்.

புலிகள் தாக்குதல் நடத்தக்கூடும் என்பதால் இந்தக் கப்பலுக்குத் துணையாக இந்தியக் கடற்படையும் செல்லும் என தமிழக அரசின் அகதிகள் மறுவாழ்வுத்துறை ஆணையாளர் இ. என். ராமதாஸ் சென்னையில் தெரிவித்தார். (உ-த)

# காணவில்லை

பெண்: **பெயர்: இராசம்மா**

வயது: 74, மனநோயாளி

நிறம்: சிவப்பு, தலைமுடி கிறில்வெட்டு

சட்டை அணிபவர், கடைசியாகச் சனிக்கிழமை அணிந்திருந்தது மண்ணிற பெரிய செக் சட்டை

தயவுசெய்து தகவல் கிடைப்பின் அறிவிக்கவும்.

வ. சிவயோகநாதன்.
[மகன்)

'ஜீவன்'
சந்தையடி,
மானிப்பாய்.

(26795)

# மரண அறிவித்தல்

## கந்தவனம் சிவகுணநாதன்

(கொழும்புத்துறை கிழக்கு)

கந்தவனம் சிவகுணநாதன் 27-07-93 இல் கனடாவில் அகால மரணமானார்.

இவர் கந்தவனம்- சிவபாக்கியம் ஆகியோரின் அன்பு மகனும், சிவகுருநாதன், சிதம்பரநாதன், சிவபாலநாதன், சிவயோகநாதன், சிவராஜேஸ்வரி, சிவயோகேஸ்வரி, சிவலோகேஸ்வரி சிவனேஸ்வரி, சிவசக்தி ஆகியோரின் சகோதரனுமாவார்.

ஈமக்கிரியைகள் கனடாவில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கந்தவனம் சிவகுருநாதன்
(சகோதரன்)
கொழும்புத்துறை கிழக்கு

க. சிவகுருநாதன்
(சித்தப்பா)
மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.

உ / 5548

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 298/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 3-08-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org